**த. நா.ச.பே. எண் :010** **நாள் : 12.08.2016**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110**–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை - 12.8.2016

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவசாயத்திற்கு முக்கிய ஆதாரமாக விளங்கும் நீரினை முழுமையான அளவு சேகரிப்பதுடன் அவற்றை சிறப்புற பயன்படுத்திட வேண்டும். எனவே தான், புதிய பாசனத் திட்டங்களை ஏற்படுத்துதல், பாசனக் கட்டமைப்புகளை பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு எனது தலைமையிலான அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில், கதவணைகள், நிலத்தடி நீர் செறிவூட்டு அமைப்புகள், தடுப்பணைகள், படுகை அணைகள் ஆகியவை கட்டுதல், அணை புனரமைப்பு, கால்வாய் புனரமைக்கும் பணிகள்; மற்றும் ஏரிகள் அமைத்தல் மற்றும் புனரமைத்தல் போன்ற 6,118 பணிகள் 3,188.50 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. 864.31 கோடி ரூபாய் மதிப்பிலான 282 பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுப்பணித் துறையின் சார்பில் பின் வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. தமிழ்நாட்டின் மிக முக்கிய அணை மேட்டூர் அணையாகும். இவ்வணையிலிருந்து மேட்டூர் கிழக்கு கரை கால்வாய் மற்றும் மேட்டூர் மேற்கு கரை கால்வாய்களின் மூலம் சேலம், நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள பாசன நிலங்கள் பயன்பெற்று வருகின்றன.

இக்கால்வாய்கள் வெட்டப்பட்டு 60 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டபடியால், தண்ணீர் கசிவு ஏற்பட்டு, கடைமடை பகுதிகளுக்கு உரிய அளவில் தண்ணீர் சென்று சேர்வதை உறுதி செய்ய இயலவில்லை.

இப்பிரச்சனையை தீர்க்க எனது அரசு கடந்த 5 ஆண்டுகளில் இவ்விரு கால்வாய்களிலும் 79.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகளை மேற்கொண்டது.

இதன் தொடர்ச்சியாக நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயின் எல்.எஸ். 45.30 கிலோ மீட்டர் முதல் எல்.எஸ். 58 கிலோ மீட்டர் வரை, 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் மேற்குகரை கால்வாயின் எல்.எஸ். 7.283 கிலோ மீட்டர் முதல் எல்.எஸ்.13.92 கிலோ மீட்டர் வரை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

இப்பணிகளின் மூலம் இக்கால்வாய்களில் தண்ணீர் கசிவு ஏற்படுவது தடுக்கப்பட்டு, கடைமடை வரை தண்ணீர் செல்வது உறுதி செய்யப்படும்.

**2.** பவானி ஆற்றின் குறுக்கே உள்ள காளிங்கராயன் அணைக்கட்டு மற்றும் அதன் வாய்க்கால் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டதாகும்.

காளிங்கராயன் வாய்க்காலின் மொத்த நீளம் சுமார் 56 மைல்கள் ஆகும். பழமையான இவ்வாய்க்காலை எனது தலைமையிலான அரசு கடந்த 5 ஆண்டுகளில் 91 கோடி ரூபாய் செலவில், முகப்பிலிருந்து 9/7 மைல் வரை இரு புறமும் கான்கிரீட் லைனிங் மற்றும் பேபி வாய்க்கால் அமைத்து புனரமைப்புப் பணிகளைச் செய்தது.

இதன் தொடர்ச்சியாக, ஈரோடு மாநகருக்குள் செல்லும் இவ்வாய்க்காலின் பகுதிகளில் கான்கிரீட் லைனிங் பணிகள் அமைத்தல் மற்றும் பேபி வாய்க்கால் அமைத்தல் ஆகிய பணிகள் 36 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

இப்பணியினால், மாநகராட்சி பகுதிகளிலிருந்தும், தோல் மற்றும் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் காளிங்கராயன் வாய்க்காலில் கலப்பது தடுக்கப்படும். மேலும், தண்ணீர் கசிவினால் ஏற்படும் இழப்பு சரி செய்யப்படுவதால், கடைகோடி விவசாயிகள் பயன் பெறுவார்கள்.

3. சரபங்கா நதி, சேலம் மாவட்டத்தில் ஏற்காடு மலையின் மேற்கு பகுதியில் உற்பத்தியாகி, ஓமலூர் எடப்பாடி மற்றும் சங்ககிரி வழியாக சுமார் 80 கிலோ மீட்டர் தூரம் ஓடி காவேரி ஆற்றுடன் கலக்கிறது.

இவ்வாற்றின் குறுக்கே 21 அணைக்கட்டுகள் உள்ளன. அதன் மூலம் 30 ஏரிகள் பாசன வசதி பெறுகின்றன. இக்கட்டுமானங்கள் 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை. எனவே இவற்றினை புனரமைத்து, மேம்படுத்துவது அவசியமாகிறது.

எனது தலைமையிலான அரசு, 2015-ஆம் ஆண்டில் ஓமலூர் மற்றும் எடப்பாடி பகுதிகளில் 13 அணைக்கட்டுகளை 5.23 கோடி ரூபாய் செலவில் புனரமைத்து மேம்படுத்தியது. இந்த ஆண்டு ஓமலூர் மற்றும் சேலம் மேற்கு பகுதிகளில் உள்ள 6 அணைக்கட்டுகள், அதன் கால்வாய்கள் மற்றும் 10 ஏரிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தப்படும். இதனால் ஆற்றில் கிடைக்கப் பெறும் வெள்ள நீர் சேமிக்கப்பட்டு, ஏரிகளுக்கு திருப்பப்படும். இதன் மூலம் ஏரிகளின் கீழுள்ள பாசன நிலங்கள் முழு பயன்பெறும்.

4. வராகநதி ஆறு வைகையாற்றின் ஒரு பிரதான கிளை ஆறாகும். தென்கரை கிராமத்தில் பெரியகுளம் நகரின் கழிவு நீர் இருபுறங்களிலும் கலப்பதால் நதி நீர் மாசு அடைகிறது. இதனை தடுக்கும் பொருட்டு, வராகநதியை சீர் செய்து தூய்மைபடுத்தும் வகையில், 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆற்றின் இரு புறமும் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைத்து அதன் மூலம் கரைகள் பலப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பெரியகுளம் வட்டத்தில் உள்ள பாசன நிலங்கள் பயன்பெறும். மேலும், ஆற்றில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

5. வைகை ஆறு, மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள் வழியாக பாய்ந்து கடலில் சென்று கலக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே பாசனத்திற்காக பல கட்டுமானங்கள் உள்ளன.

மழைக் காலங்களில் ஆற்றில் வரும் வெள்ள நீரை சேமிக்கும் பொருட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் பேரூராட்சி அருகே, வைகையாற்றின் குறுக்கே 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை ஒன்று அமைக்கப்படும்.

இத்திட்டத்தினால், ஆற்றில் வரும் வெள்ள நீர் சேமிக்கப்பட்டு, தடுப்பணையின் மேற்புறத்தில் அமைந்துள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கிணறுகளில் நீர் செறிவூட்டப்படும். மேலும், அருகில் உள்ள பாசன கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதன் காரணமாக அப்பகுதி பாசன நிலங்கள் பயன்பெறும்.

6. ஏரிகளை மேம்படுத்தும் பணிகளுக்கு எனது தலைமையிலான அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. நீர்பிடிப்புப் பகுதிகள் மேம்படுத்தப்படுவதால், நீர் நிலைகளின் கொள்ளளவு அதிகரிக்கும். அதனால், நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு குடிநீர் ஆதாரம் பெருகும். மேலும் விவசாய உற்பத்தியும் பெருகும். திருவண்ணாமலை மாவட்டத்தில் 8 ஏரிகள், தருமபுரி மாவட்டத்தில் 7 ஏரிகள், வேலூர் மாவட்டத்தில் 12 ஏரிகள், விருதுநகர் மாவட்டத்தில் 22 ஏரிகள் என 49 ஏரிகள், 22 கோடியே 83 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு புனரமைக்கப்படும்.

இந்த 49 ஏரிகளில் மேற்கொள்ளப்படும் பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் காரணமாக 3,789 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

7. திருச்சியிலுள்ள பொதுப்பணி பணியாளர் பயிற்சி நிலைய அலுவலகம் சுமார் 60 வருடம் பழமை வாய்ந்த கட்டடத்தில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நிலையத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பொதுப்பணித்துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே, இப்பயிற்சி நிலையத்திற்கு விரிவுரையாளர் அரங்கம் மற்றும் பல்நோக்கு அரங்கம் உள்ளடக்கிய புதிய கட்டடம் 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

தற்போது என்னால் அறிவிக்கப்பட்டுள்ள இந்த புதிய திட்டங்களின் பயனாக நீர் ஆதாரம் மேம்படுத்தப்பட்டு விவசாய உற்பத்தி பெருக வழி வகை ஏற்படும்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**